

உ

"சாமியே சரணம் ஐயப்பா"

# ஐயப்பன் பாமாலை

தெகிவளை

நெடுமால் ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணு ஆலய

## ஐயப்ப யாத்திரைக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சாமியே சரணம் ஐயப்பா"



**சாமியே சரணம்!**

வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் கலியுக வரதன், சுவாமி ஐயப்பனுடைய மண்டல விரதம் அனுஷ்டித்து, மாலை அணிந்து, சபரிமலை புனித யாத்திரை செல்லும் ஐயப்பன் பக்தர்களுக்கு தினசரி பாராயணத்திற்கு வேண்டிய பஜனைப் பாடல்களைத் தொகுத்து

# ஐயப்பன் பாமாலை

என்ற பெயரில் வெளியீடு செய்கின்றோம். ஐயப்ப பக்தர்கள் அனைவரும் சுவாமி ஐயப்பனுடைய இப்பாமாலையை பாராயணம் செய்து ஐயப்பன் அருளைப் பெற்று சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்வீர்களாக.

**சாமியே சரணம்!**

**தெஹிவளை**

**நெடுமால் ஸ்ரீ வெங்கடேஸ்வர**

**மகா விஷ்ணு ஆலய**

**ஐயப்ப யாத்திரைக் குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியே சரணம் ஐயப்பா! சாமியே சரணம் ஐயப்பா!

சாமியே சரணம் ஐயப்பா! சாமியே சரணம் ஐயப்பா! சாமியே சரணம்

சாமியே சரணம் ஐயப்பா! சாமியே சரணம் ஐயப்பா! சாமியே சரணம்



சாமியே சரணம் ஐயப்பா! சாமியே சரணம் ஐயப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சாமியே சரணம் ஐயப்பா"



**சபரிமலை யாத்திரை மேற்கொள்வோர்
கடைப்பிடிக்க வேண்டிய விரதங்களும் விதிமுறைகளும்**

சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் பல கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

பெற்றோரினதும், குருசுவாமியினதும் அனுமதி பெற்ற பின்னரே விரதம் அனுட்டிக்க வேண்டும். விரதம் அனுட்டிக்கும்போது குடும்ப அங்கத்தினருக்கு எதுவித சங்கடமும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் விரதம் ஆரம்பிப்பதற்கு முதல் நாள் வீட்டில் பூசைகள் செய்து, வழிபட்டு சுத்தமான மஞ்சள் நிற துணியில் ஒரு நாணயத்தை வைத்து கட்டி காணிக்கை செலுத்த வேண்டும்.

விரதம் அநுட்டிப்பதற்கு முதல் பக்தர்கள் முகச் சவரம் செய்து, நகம் வெட்டி, தலைமயிர் வெட்டி குளிக்க வேண்டும். ஐயப்ப மாலையை சுத்தம் செய்து சந்தனம் இட்டு புனிதப்படுத்த வேண்டும். புனித மாலையை ஐயப்ப சுவாமியின் படத்தின் முன் அல்லது ஐயப்பசுவாமியின் விக்கிரகத்தின் முன் வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சோடி வர்ண வேட்டியும், ஒரு துவாய் அல்லது ஒரு துண்டும் வாங்கிக் கொள்ள வேண்டும்.

விரத தினத்தன்று பக்தன் அதிகாலையில் எழுந்து நீராடிய பின் தெய்வ வழிபாடு செய்து புனித மாலைக்கு பூசை செய்ய வேண்டும். பின் தனது குருசுவாமியுடன் ஆலயத்திற்குச் சென்று ஐயப்ப மாலையை குருவின் கைகளால் அணிந்து கொள்ள வேண்டும்.

மாலை அணிந்து கொள்வதானது பக்தன் தன்னை ஐயப்பனாகவே கருதுவதோடு புனிதமான சமய நெறியைக் கடைப்பிடிப்பதைக் குறிக்கும்.

மாலையணிந்த ஐயப்ப பக்தர்கள் சமூக வைபவங்களில் கலந்து கொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். இறைவனை வழிபடுவதிலும், பஜனைகளில் கலந்து கொள்வதிலும், ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதிலும் சமய பிரசாரங்களைக் கேட்பதிலும் ஈடுபடுவதுடன், எந்நேரமும் இறை சிந்தனையுடனேயே இருக்க வேண்டும்.

மாலையணிந்த ஐயப்ப ஆலயங்களைத் தரிசித்தல், ஆலயங்களை சுத்தம் செய்தல், அன்னதானம் வழங்கல், நோயாளர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்தல் போன்ற பணிகளிலும் ஈடுபடலாம்.

மாலையணிந்த ஐயப்ப பக்தர்கள் கட்டாயமாக சைவ உணவை மாத்திரம் உண்பதுடன் மதுபானம் அருந்துதல், புகைத்தல் போன்ற தீய பழக்கங்களை மேற்கொள்ளக் கூடாது.

உடலால், உள்ளத்தால், செயலால், வார்த்தைகளால் கூட அடுத்தவர்களுக்கு தீங்கு ஏற்படுத்தும் வகையில் ஈடுபடக்கூடாது.

மாலையணிந்த ஐயப்ப பக்தர்கள் தரையில் படுத்து உறங்க வேண்டும். மரத்துண்டு அல்லது மரப்பலகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையணையாக பயன்படுத்தலாம். பாதணிகள் அணியாது நடக்க வேண்டும்.

மாலையணிந்த ஐயப்ப பக்தர்கள் ஏனைய பக்தர்களை ஐயப்ப சுவாமியாகவே மதித்து அவருக்கு தொண்டு செய்ய வேண்டும்.

மாலையணிந்த ஐயப்ப பக்தர்கள் அனைத்து பெண்களையும் தனது தாயாகவே மதித்து நடக்க வேண்டும். தாம்பத்திய உறவுகள் வைத்துக் கொள்ளக் கூடாது.

தலைக்கு எண்ணெய் வைத்தல், உடலில் எண்ணெய் பூசுதல் கூடாது. தீய எண்ணங்களில் இருந்து விடுபட எந்நேரமும் துளசி இலையை உடன் வைத்திருக்க வேண்டும்.

**ஐயப்ப பூசை**

குளித்துவிட்டு வீட்டில் பூசைகளை முடித்தபின் ஐயப்ப பூசைகளுக்கான ஆயத்தங்களை செய்ய வேண்டும். 18 படிகள் கொண்ட படி மேசையை சுத்தம் செய்து பூக்களால் அலங்கரித்து அதன் மீது ஐயப்ப சுவாமியின் படம் அல்லது விக்கிரகத்தை வைக்க வேண்டும். அதன் பின், பின்வரும் ஒழுங்கு முறைகளில் பூசைகள் நடைபெறுதல் வேண்டும்.

- முதலில் விநாயகர் பூசை நடைபெறும்
  (விநாயகரின் படத்திற்கு அல்லது விக்கிரகத்திற்கு தீபம் காட்டல்)
- ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கான பூசை
- ஐயப்பன் மாலை மந்திரம்
  (மாலை அணிவதற்கான மந்திரம்)
- ஐயப்பன் அஷ்ட தோத்திரம்
- ஐயப்பன் சரணம் (108 சரணங்கள்)
- ஐயப்பன் மூல மந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐயப்பன் காயத்திரி
- ஐயப்பன் நமஸ்காரம்
- ஹரிவர்ஸனம்
- மாலை கழற்றுவதற்கான மந்திரம்

  (இது சபரிமலை யாத்திரை முடித்துவிட்டு வீடு திரும்பிய பின் புனித மாலையை கழற்றுவதற்கு முன் ஜெபிக்கப்படும் மந்திரமாகும்)

**குருசுவாமி**

சபரிமலை யாத்திரையின்போது குருசுவாமியின் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானதும் மகத்தானது மாகும்.

குருவானவர் வயதில் முதிர்ந்தவராகவும், பெருவழி பாதை ஊடாக தொடர்ச்சியாக ஏழு (7) முறைகள் யாத்திரை மேற்கொண்டவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் மகர ஜோதியை தரிசித்தவராகவும் இருக்க வேண்டும். மாலையணிந்த ஐயப்ப பக்தர்கள் குருசுவாமியை ஐயப்பனாகவே, அனைத்து சந்தர்ப்பங் களிலும் அவரின் சொற்படியே நடக்க வேண்டும். அவரின் கட்டளைகளை அப்படியே கடைப்பிடிக்க வேண்டும். உடலாலும், உள்ளத்தாலும், வார்த்தை களாலும் அவருக்காக சேவையாற்ற வேண்டும்.

அவர் தனது சிஷ்யர்களுக்கான அறிவுறுத்தல்களை யும், வழிகாட்டல்களையும் இலகுவான முறையிலும் தெளிவாகவும் வழங்குவார். அவர் சரண கோஷம் செய்யும் முறையையும், பஜனை பாடும் முறையையும் விளக்கி அவற்றில் பக்தர்களை ஈடுபடுத்தி அவர்களை உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் சபரிமலை யாத்திரைக்காக பக்குவப்படுத்தி பாதுகாப்பாகவும், வசதியாகவும் வழிநடத்திச் செல்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புனித இருமுடி**

இருமுடியானது ஐயப்ப யாத்திரிகர்கள் தலையில் சுமந்து செல்லும் பிரயாணப் பொதியாகும். 41 நாட்கள் விரதம் அநுட்டித்தவர்கள் மாத்திரம் இருமுடியை சுமந்து செல்ல அனுமதிக்கப்படுவர். இருமுடியை சுமந்து செல்லாதவர்கள் 18 படிகளில் ஏற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இரு முடியானது "முன் முடி, பின் முடி" என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

**முன் முடி:**

இதில் பூசைக்குரிய திரவியங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

**பின்முடி:**

இதில் யாத்திரையின் போது யாத்திரீகர்களுக்குத் தேவைப்படும் பொருட்கள் அடங்கியிருக்கும்.

**முன்முடியில் அடங்கும் பொருட்கள்:**

- 1. முத்திரைத் தேங்காய் 1 ((பசு நெய் நிரப்பப்பட்டிருக்கும்)
- 2. சிறிய தேங்காய்கள் (2 - 4 வரை)
- 3. வெற்றிலை, பாக்கு, காணிக்கை (சில நாணயங்கள்)

  சர்க்கரை (அச்சுவெல்லம்), முந்திரி, உலர்ந்த திராட்சை, சுக்கு, அவல் பொரி, அவல், ஏலம், பேரீட்சை, தேன், மஞ்சள், மஞ்சள் தூள், குங்குமம், சந்தனம், சாம்பிராணி கற்பூரம், ஊதுவத்தி, பன்னீர், எலுமிச்சம் பழம், அரிசி, பருப்பு, இரவிக்கைத் துணி போன்றவை. (நைவேத்தியத்திற்கு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெய் அபிஷேகத்துக்குரிய தேங்காய்**

கட்டு நிரைக்கு முன், அளவான தேங்காய் ஒன்றை எடுத்து, நார் நீக்கி, சுத்தம் செய்து, பளபளப்பாக தேய்த்துக் கொள்ள வேண்டும். கூரிய பொருளொன்றின் உதவியுடன் தேங்காயின் கண் திறந்து நீரை வெளியேற்ற வேண்டும். திறந்த கண் பகுதியை (கார்க்கால்) இறுக மூடிவிடவேண்டும்.

ஏனைய தேங்காய்களையும் நார் நீக்கி சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இவற்றுள் இரண்டு எருமேலி, சரங்குத்தி, ஆகிய இடங்களில் உடைப்பதற்கும், எனையவை 18ம் படி ஏறுவதற்கு முன் ஒன்றும், திரும்பி வரும்போது ஒன்றுமாகும்.

சர்க்கரை, சுக்கு, ஏலம், முந்திரி, உலர்ந்த திராட்சை, தேன், பேரீட்சை போன்றவற்றின் ஒரு பகுதி நைவேத் தியத்திற்காக பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்கு பயன்படுத் தலாம்.

மிகுதியை நெய்வேத்தியம் செய்வதற்காக 'பனாகம்' தயாரிப்பதற்கு பயன்படுத்தலாம்.

**பின்முடி:**

யாத்திரை ஆரம்பிக்கும் தினத்திலிருந்து 'கட்டு நிரை' திரும்பி வரும் தினம் வரை யாத்திரீகர் களுக்கு தேவையான பொருட்கள் பின் முடியில் அடங்கும்.

பிரயாணத்தின் போது தேவைப்படும் சிற்றுண்டி வகைகள், உணவு தயாரிப்பதற்கான அரிசியும், தானியங்களும், இதில் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை,
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை,
நந்தி மகன்தனை, ஞானக் கொழுந்தினை,
புந்தியில் வைத்துஅடி போற்றுகின்றேனே

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை,
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்,
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்,
கணபதி என்றிடக் கருமம் இல்லையே.

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்,
சகட சக்கரத் தாமரை நாயகன்,
அகட சக்கர வின்மணி யாவுற,
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற,
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுற,
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்,
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்,
கருணை பூக்கவும், தீமையைக் காய்க்கவும்,
பருவ மாய்நமது உள்ளம் பழுக்கவும்,
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், மாமலரான்
நோக்குண்டாம், மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் நாமாவளி

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை மீதிலே அரச மரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்.

(பிள்)

யானைமுகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்

(பிள்)

அவல்கடலை சுண்டலும் அரிசிக் கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணை மூடித்தூங்குவார்

(பிள்)

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்

(பிள்)

ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம்
ஹர ஹர ஹர ஹராய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மையும் காக்க வேண்டி வரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம்போல சுற்றுவார்.

(பிள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் அன்றே.

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.

## நமசிவாயத் திருப்பதிகம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி,
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்,
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ,
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்,
நற்றுணையாவது நமச்சி வாயவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை,
மற்றவர் அறியா மாணிக்க மலையை,
மதிப்பவர் மனமணி விளக்கை,
செற்றவர் புரங்கள் செற்றவம் சிவனை,
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்,
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்,
மன்னிய தில்லை தன்னுள்,
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## அபிராமி பாடல் - திருக்கடவூர்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழிபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலைஆழி அறிதுயில்கொள் மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அந்தாதி நூற்பயன்

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழுவார்க்கொரு
- தீங்கில்லையே

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறு செய்தனி வேல்வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

### ஸ்ரீ அரி ஓம் நமோ

## ஸ்ரீ ராம ஜெயம்

### திருக்காப்பு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வித் திருக்காப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெரும்துயரிடும்பையில் பிறந்து
கூடினேன்கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

குலம் தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயினசெய்யும்
நலந்தருஞ் சொல்லைநான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்க் கமலச்செங்கண்
அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே.

குடநிசை முடியை வைத்து குணதிவை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுளாரே அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகுதையா என் செய்வேன் உலகத்தாரே.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்குமி துதி

பங்கஜ வாஷினி பங்கஜலோசனி பங்கஜ பாணியளே
சங்கடம் நீங்கிட சகலசௌபாக்கியம் தந்திட வந்திடுவாய்
பொங்கிய அன்புடன் பொன்னடி போற்றிடும் புண்ணியர்க் கருள்பவளே
ஜெய ஜெய ஜெயசௌ பாக்கியலக்ஷ்மி ஜெயலக்ஷ்மி ஸ்ரீதேவி

## சரஸ்வதி துதி

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
மேய உணர் விக்கும் என்அம்மை - தூய
உருப்பளிங்குபோல் வாள்என் உள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்

## பெரிய புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி, அளவிலா அளவும் ஆகி,
சோதியாய் உணர்வும் ஆகி, தோன்றிய பொருளும் ஆகி,
பேதியா ஏகம் ஆகிப், பெண்ணுமாய் ஆணும் ஆகி,
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!!

## ஞான வைரவர் துதி

சாயாத சூலதண்டா யுதனேபச்சைச் சட்டையனே
வேயார் விண்ணோர் தொழும் மேனியனே யென்மிடி தவிர்ப்பாய்
வாயார வண்ணைத் துதிப்போர்க்கு வேண்டும் வரம்தருவாய்
தாயாகிய அப்பனே காழி யாபதுத்தாரணனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்காதேவி துதி

பகவதி தேவி பர்வததேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெயவெனவே
சங்கரி உன்னைப் பாடிடுமே
ஹந ஹந தகதக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதி யானவளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடனம் ஈஸ்வரியே
முண்டினி தேவி முனை யொளிசூலி
முனிவர்கள் தேவி மணித்தீவி
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

காளினி தேவி காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான்விழியே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க்கையளே
ஊரணி மாயே ஊறறு தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
சானக யாயே காசினியே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகளானாய் கலைமகளானாய்
மலைமகளானாய் துர்க்கையளே
பெருநிதியானாய் பேரறிவானாய்
பெருவலியானாய் பெண்மையளே
நறுமலரானாய் நல்லவளானாய்
நந்தினியானாய் நங்கையளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

வேதமும் நீயே வேதியன் நீயே
வேதமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

ஜெயஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரிணி சந்த்ர கண்டினியே
ஜெயஜெய கூஷ் மாண்டினிஸ்கந்த
மாதினி காத்யா யன்யளே
ஜெயஜெய கால ராத்ரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கையளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெயதுர்க்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொலோ சகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக்கடலே சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய் சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதொளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலுங் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப்பேடே சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தத் தடிமைகொள் வாய்நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் பாடல்கள்



மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸுத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே
ஓம் கன்னிமூல கணபதி பகவானே
சரணம் ஐயப்பா!

குரு பிரம்மா குரு விஷ்ணு
குரு தேவோ மஹேஸ்வர
குரு ஷாட்சாத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா

மூஷிக வாகன சரணம் கணேசா
மோதக ஹஸ்தா சரணம் கணேசா
வாமன ரூபா சரணம் கணேசா
மஹேஸ்வர புத்ரா சரணம் கணேசா *(கணேச சரணம்)*

சங்கர சுதனே சரணம் கணேசா
சக்தியின் மைந்தா சரணம் கணேசா
சாமர கர்ணா சரணம் கணேசா
விளம்பித சூத்ரா சரணம் கணேசா *(கணேச சரணம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக் கொம்பன் விநாயகனே
வினைகள் தீர்க்கும் ஐங்கரனே
அன்னை பராசக்தி அருந்தவ புதல்வா
ஆனைமுகத்து விநாயகனே. *(வெள்ளிக்)*

அகமும் புறமும் இருப்பவனே
அடியார் துணைதனை துடைத்தவனே
ஆற்றோரத்திலும் குளக்கரை தனிலும்
அமர்ந்து அரசாட்சி புரிபவனே. *(வெள்ளிக்)*

அகந்தை அழித்திடும் ஐங்கரனே
அன்பில் உறைந்திடும் குணநிதியே
அன்னை தந்தையையும் வலமாக வந்து
அருள் மாங்கனியை பெற்றவனே. *(வெள்ளிக்)*

## சகல தெய்வ நமஸ்காரம்

ஜெய கணேச ஜெய கணேச ஜெய கணேச பாஹிமாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ரட்சமாம்
சரவணபவ சரவணபவ சரவணபவ பாஹிமாம்
ஸுப்ரமண்ய ஸுப்ரமண்ய ஸுப்ரமண்ய ரட்சமாம்
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா பாஹிமாம்
வேலாயுதா வேலாயுதா வேலாயுதா ரட்சமாம்
கலாவல்லி கலாவல்லி கலாவல்லி பாஹிமாம்
கலைவாணி கலைவாணி கலைவாணி ரட்சமாம்
ஜெய சரஸ்வதி ஜெய சரஸ்வதி ஜெய சரஸ்வதி பாஹிமாம்
ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரீ சரஸ்வதி ரடசமாம்
மஹாலக்ஷ்மி மஹாலக்ஷ்மி மஹாலஷ்மி பாஹிமாம்
ஸ்ரீதேவி ஸ்ரீதேவி ஸ்ரீதேவி ரட்சமாம்
பராசக்தி பராசக்தி பராசக்தி பாஹிமாம்
மஹாசக்தி மஹாசக்தி மஹாசக்தி ரட்சமாம்
ஜெயலக்ஷ்மி ஜெயலக்ஷ்மி ஜெயலக்ஷ்மி பாஹிமாம்
ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய பாஹிமாம்
ஸ்ரீ சிவாய ஸ்ரீ சிவாய ஸ்ரீ சிவாய ரட்சமாம்
சம்புகுமார சம்புகுமார சம்புகுமார பாஹிமாம்
சபரிகிரீசா சபரிகிரீசா சபரிகிரீசா ரட்சமாம்
ஜெயராமா ஜெயராமா ஜெயராமா பாஹிமாம்
ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ரட்சமாம்
ஆஞ்சனேய ஆஞ்சனேய ஆஞ்சனேய பாஹிமாம்
ஹனுமந்த ஹனுமந்த ஹனுமந்த ரட்சமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவ ஹர சுப்ரமண்யம்

### முருகன்

அன்பருக்கு அன்பனே நீ வாவா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வாவா முருகா
ஈசனுமை பாலகனே வாவா முருகா
உலகநாதன் மருகனே நீ வாவா முருகா
எட்டிக்குடி வேலவனே வாவா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வாவா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வாவா முருகா
ஒய்யாரி வள்ளிலோலா வாவா முருகா
ஓங்கார தத்துவமே வாவா முருகா
ஔவைக் குபதெசித்தவா வாவா முருகா
அகில லோக நாயகனே வாவா முருகா

## ஓடி வா முருகா

ஓடி வா முருகா நீ ஓடி வா கந்தா (ஓடி வா)
உமையவள் தன் மகனே ஓடி வா முருகா

கணபதி சோதரனே ஓடி வா முருகா,
கண்கட்ட தெய்வமே நீ ஆடி வா முருகா
ஆறுமுக வேலனாக ஓடி வா முருகா
ஏறு மயில் ஏறியே நீ ஆடி வா முருகா (ஓடி வா)


தெய்வானை வள்ளியோடு ஓடி வா முருகா,
செந்தில் வடிவேலவனே ஆடி வா முருகா
ஆறுமுக தோற்றத்தோடு ஓடி வா முருகா
அரோகரா அரோகரா ஆடி வா முருகா (ஓடி வா)

கூட்டாக குரல் கொடுத்தோம் ஓடி வா முருகா,
ஆட்டமாடி வாட்டம் தீர்க்க ஆடி வா முருகா
ஆறுமுக பேரழகா ஓடி வா முருகா
ஆறுதலை தந்திடவே ஆடி வா முருகா (ஓடி வா)

தைமாதம் பிறந்திடவே ஓடி வா முருகா,
தரணியில் கொண்டாட்டமாய் ஓடி வா முருகா
தை பூசத் திருநாளில் ஓடி வா முருகா
தங்கத் தேர் பவனியிலே ஆடி வா முருகா (ஓடி வா)

அடிவாரம் சுத்தி வந்தோம் ஓடி வா முருகா,
ஆண்டி உனைக் காண வாறோம் ஓடி வா முருகா
அருளையெல்லாம் தருபவனே ஓடி வா முருகா
அன்னை சக்தி பாலனே ஆடி வா முருகா (ஓடி வா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## சிவன் தோத்திரங்கள்

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

மண்ணினைச் சுமந்தவா ஓம் நமசிவாய ஓம்
நஞ்சினைக் குடித்தவா ஓம் நமசிவாய ஓம்
கயிலையில் அமர்ந்தவா ஓம் நமசிவாய ஓம்
கங்கையைத் தரித்தவா ஓம் நமசிவாய ஓம்
தாண்டவம் புரிந்தவா ஓம் நமசிவாய ஓம்
தாயுமாகி வந்தவா ஓம் நமசிவாய ஓம்
விந்தைகள் புரிந்தவா ஓம் நமசிவாய ஓம்
சிந்தையுள் நிறைந்தவா ஓம் நமசிவாய ஓம்

## தில்லை அம்பல நடராஜா

தில்லை அம்பல நடராஜா
திருவருள் வேண்டும் நடராஜா
திருநீல கண்ட ஜெகதீசா
தினமும் தொழுவேன் மகாதேவா (தில்லை)

கயிலையில் வாழும் கைலாசா என்
கருத்தினில் வந்திடு சுகவாசா
தோடணி செவியுடை பெருமானே
பீடுடை பிரம்மா புரியோனே (தில்லை)

கங்கை கொண்டாய் நடராஜா
திங்கள் கொண்டாய் சதாசிவா
மங்கை கொண்டாய் மகேசா - என்
மனதில் இருப்பாய் மலைவாசா (தில்லை)

சிவாய பரமேஸ்வராய சசி சேகராய நம ஓம்
பவாய குணசம்பவாய சிவ தாண்டவாய நம ஓம்
ஸர்வாய ஸர்வேஸ்வராய விஸ்வேஸ்வராய நம ஓம்
லோகாய லோகேஸ்வராய ரிஷிபத் பஜாய நம ஓம் (சிவாய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாதுமாகி

யாதுமாகி நின்றாய் - தாயே
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல் களின்றியில்லை
போது மிங்க மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி தாயே என் மீ
தருள் புரிந்து காப்பாய் *(யாதுமாகி)*

எந்த நாளும் நின்மேல் - தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்த னைப்ப யந்தாய் - தாயே
கருணை வெள்ளமானாய்
மந்த மாருதத்தில் - வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்றுமன்றோ *(யாதுமாகி)*

## அம்மன் வழிபாடு

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவருந்த வள்ளி தெய்வானையம்மா
விற்கோவில் வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
பொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழவைப்பாய் என்னை நீயே

*(கற்பூர நாயகியே கனகவல்லி காளி மகமாயி கருமாரியம்மா)*

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே நாகேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமான பரம்பொருளே ஜெகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி!

*(கற்பூர நாயகியே கனகவல்லி காளி மகமாயி கருமாரியம்மா)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரகப்பாடல்கள்

## ஞாயிறு

காசினி இருளை நீக்குங் கதிரொளி ஆகிளங்கும்
பூசனை உலகோர்போற்றப் புசிப்பொடு சுகத்தைநல்கும்
வாசியே ழுடையதேர்மேல் மகாகிரி வலமாய்வந்த
தேசிகா யெனைரட்சிப்பாய் செங்கதி ரவனேபோற்றி.

## திங்கள்

அலைகட லதனினின்று மன்றுவந் துதித்தபோது
கலைவளர் திங்களாகிக் கடவுளென் றெவருமேத்துஞ்
சிலைநுத லுமையாள்பங்கன் செஞ்சடைப் பிறையாய்மேரு
மலைவல மாகவந்தமதியமே போற்றி போற்றி.

## செவ்வாய்

வசனநற் றைரியத்தோடு மன்னவர்சபையில் வார்த்தை
புசபலபராக் கிரமங்கள்போர் தனில்வெற்றி யாண்மை
நிசமுட னவரவர்க்கு நீணிலந்தனில ளிக்குங்
குசனில மகனாஞ்செவ்வாய் குறைகழல் போற்றி போற்றி.

## புதன்

மதனநூல் முதலாநான்கு மறைபுகழ் கல்விஞானம்
விதமுட னவரவர்க்கு விஞ்ஞைகள ருள்வோன்திங்கள்
சுதன்பல சுபாசுபங்கள் சுகம்பல கொடுக்கவல்லன்
புதன்கவிப் புலவன்சீர்மால் பொன்னடி போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழன்

மறைமிகு கலைநூல்வல்லோன் வானவர்க் கரசன்மந்திரி
நறைசொறி கற்பகப்பொன் னாட்டினுக் கதிபனாகி
நிறைதனஞ் சிவிகைமண்ணி னீடுபோகத்தைநல்கு
மிறையவன் குருவியாழ னிருமலர்ப் பாதம் போற்றி.

## வெள்ளி

மூர்க்கவான் சூரன்வாணன் முதலினோர் குரவாய் வையங்
கர்க்கவான் மழைபெய்விக்குங் கவிமகன்கனக மீவோன்
தீர்க்கவான வர்கள்போற்றச் செத்தவர்தமை யெழுப்பும்
பார்க்கவான சுக்ராச்சாரி பாதபங்கயமே போற்றி.

## சனி

முனிவர்க டேவரேழு லூர்த்திகண் முதலினோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வுன் மகிமைய தல்லாதுண்டோ
கனிவள தெய்வம்நீயே கதிர்சேயே காகஅமறுஞ்
சனியனே யுனைத் துதித்தேன் தமியனேற் கருள்செய்வாயே.

## ராகு

வாகுசேர் நெடுமால்முன்னம் வானவர்க முதமீயப்
போகுமக் காலையுன்றன் புணர்ப்பினாற் சிரமேயற்றுப்
பாகுசேர் மொழியாள்பங்கன் பரன்கையில்மீண்டும் பெற்ற
ராகுவே யுனைத்துதிப்பேன் போற்றி போற்றி.

## கேது

பொன்னையி னுரத்திற்கொண்டேன் புலவர்தம் பொருட் டாலாழி
தன்னையே கடந்துமுன்னம் தண்ணமு தளிக்கலுற்ற
பின்னைநின் கரவானுண்ட பெட்பினிற் சிரம்பெற்றுய்ந்தா
யென்னையாள் கேதுவேயிவ் விருநிலம் போற்றத்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சாமியே சரணம் ஐயப்பா!



## விஷ்ணு தோத்திரங்கள்

ஓம் நமோ நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹீ தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத்

### கோவிந்த கிருஷ்ணா

கோவிந்த கிருஷ்ண விட்டலா - வேணு
கோபால கிருஷ்ண விட்டலா
பாண்டுரங்க விட்டலா - ஸ்ரீ ஹரி
பண்டரி நாத விட்டலா

### ரகுபதி ராகவ

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதீத்த பாவன சீத்தா ராம்
ஈஸ்வர அல்லா தேரோ நாம்
சபுக்கோ சன்மதி ஹே பகவான்

பஜனப் பியாரே ராம ஹரி
பஜமனப் பியாரே கிருஷ்ண ஹரி
ராம ராம ராம ராம ராம ராம ராம
ராம ராம ராம ராம ராம ராம ராம

### ஆனந்தஸாகரா

ஆனந்த ஸாகரா முரளீ தரா
மீரா பிரபு ராதே ஸ்யாம வேணு கோபாலா
நந்த யசோதா ஆனந்த கிசோரா
ஜெய் ஜெய் கோகுல பாலா ஜெய் ராஜ கோபாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஓம் நமோ நாராயணா

"சாமியே சரணம் ஐயப்பா!"

# வெத்தலையில் மால....

வெத்தலையிலை மாலை கட்டுங்க மால கட்டுங்களே - உங்க
வேதனையை சொல்லி சொல்லி மாலை கட்டுங்களே
துளசி இலை கொழுந்தெடுத்து கோர்த்து கட்டுங்களே - ராம
தோத்திரத்தை சொல்லி சொல்லி மால கட்டுங்களே - *(வெத்தல)*

கோடி பணம் கேட்பதில்லை மாருதி ராஜா - அவன்
கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா
ராம ஜெயம் சொன்னீங்கன்னா வந்து நிற்பானே - தினம்
ராம நாத சாமி பேர பாடி நிற்பானே - *(வெத்தல)*

ஆசை எல்லாம்வேரறுத்த அற்புத சாமி - அவன்
ஓசை தரும் மணியிருக்கும் வால் கொண்ட சாமி
காத்தடிச்சா புயலடிச்சா கலங்கிடலாமா - அந்த
கட்டித்தங்க மனசிருக்க தவிப்பது ஏம்மா - *(வெத்தல)*

பொட்டு வைச்சு பொட்டு வைச்சு பூச செஞ்சாலே - அவன்
எட்டு வச்சி வாசல் கதவ தட்டிடுவானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே - அவன்
மெல்ல வந்து தாளமிட்டு கேட்டிருப்பானே - *(வெத்தல)*

கும்மி கொட்டி கும்மி கொட்டி கும்பிடு போடு - எங்க
கோமகனாம் மாருதிக்கு சரணங்கள் பாடு
நம்பி வந்து நம்பி நின்று நல்லதைக் கேளு - மனம்
வெம்பி வெடிக்க தேவையில்லை நன்மை கையோடு - *(வெத்தல)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயர் பாடி

ஆயர் பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப் போல்
மாயக் கண்ணன் தூங்குகின்றான் - தாலேலோ - (ஆயர்பாடி)

அவன் வாய் நிறைய மண்ணை உண்டு மண்டலத்தைக் காட்டியபின்
ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் ஆராரோ
ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் ஆராரோ - (ஆயர்பாடி)

பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னம் வைத்து
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ

அந்த மந்திரத்தில் அவன் உறங்க மயக்கத்திலே இவன் உறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா ஆராஆரா - (ஆயர்பாடி)

நாகப் படம் மீதில் அவன் நர்த்தனங்கள் ஆடிய பின்
ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் தாலேலோ
ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் தாலேலோ

அவன் மோன நிலை கூட ஒரு யோக நிலை போலிருக்கும்
யார் அவனைத் தூங்கவிட்டார் ஆராரோ
யார் அவனைத் தூங்கவிட்டார் ஆராரோ - (ஆயர்பாடி)

கண்ணன் அவன் தூங்கிவிட்டால் காசினியே தூங்கி விடும்
அன்னையரே துயில் எழுப்ப வாரீரோ
அன்னையரே துயில் எழுப்ப வாரீரோ

அவன் பொன்னழகை பார்ப்பதற்கும் போதை முத்தம் கேட்பதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ - (ஆயர்பாடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாமியே சரணம் ஐயப்பா!"

## ஸ்ரீ தர்ம சாஸ்தா அஷ்டோத்திர சதநாமங்கள்

ஓம் மஹா சாஸ்த்ரே ................நம
ஓம் மஹா தேவாய ................நம
ஓம் மஹா தேவஸூதாய ................நம
ஓம் அவ்யயாய ................நம
ஓம் லோக கர்த்ரே ................நம
ஓம் லோக பர்த்ரே ................நம
ஓம் லோக ஹர்த்ரே ................நம
ஓம் பராத் பராய ................நம
ஓம் த்ரிலோக ரக்ஷாய ................நம
ஓம் தன்வினே ................நம
ஓம் தபஸ்வினே ................நம
ஓம் பூத ஸைனிகாய ................நம
ஓம் மந்த்ரவேதினே ................நம
ஓம் மஹாவேதினே ................நம
ஓம் மாருதாய ................நம
ஓம் ஜகதீச்வராய ................நம
ஓம் லோகாத்யக்ஷாய ................நம
ஓம் அக்ரண்யே ................நம
ஓம் ஸ்ரீமதே ................நம
ஓம் அப்ரமேய பராக்ரமாய ................நம
ஓம் ஸிம்ஹாரூடாய ................நம
ஓம் கஜாரூடாய ................நம
ஓம் ஹயாரூடாய ................நம
ஓம் மஹேஸ்வராய ................நம
ஓம் நாநாசஸ்த்ரதாய ................நம
ஓம் அநர்க்காய ................நம
ஓம் நா நா வித்யா விசாரதாய ................நம
ஓம் நா நா ரூப தராய ................நம
ஓம் வீராய ................நம
ஓம் நாநாப்ராணி நிஷேவகாய ................நம
ஓம் பூஜேசாய ................நம
ஓம் பூஜிதாய ................நம
ஓம் ப்ருத்யாய ................நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் புஜங்கரபரயோத்தமாய ................நம
ஓம் இஷீதன்வினே ................நம
ஓம் புஷ்ப பாணாய ................நம
ஓம் மஹா ரூபாய ................நம
ஓம் மஹாப்ரபுவே ................நம
ஓம் மாயாதேவீஸூதாய ................நம
ஓம் மான்யாய ................நம
ஓம் மஹா நீதாய ................நம
ஓம் மஹா குணாய ................நம
ஓம் மஹா சைவாய ................நம
ஓம் மஹா ருத்ராய ................நம
ஓம் வைஷ்ண வாய ................நம
ஓம் விஷ்ணு பூஜகாய ................நம
ஓம் விக்னேசாய ................நம
ஓம் வீரபத்ரேசாய ................நம
ஓம் பைரவாய ................நம
ஓம் ஜகதீஸ்வரய ................நம
ஓம் ஷண்முகத்ரு வாய ................நம
ஓம் மேருச்ருங்க ஸமாஸீனாய ................நம
ஓம் முனிஸங்கநிஷேவிதாய ................நம
ஓம் தேவாய ................நம
ஓம் பத்ராய ................நம
ஓம் ஜகந்நாதாய ................நம
ஓம் கணநாதாய ................நம
ஓம் கணேஷ்வராய ................நம
ஓம் மஹா யோகினே ................நம
ஓம் மஹா மாயினே ................நம
ஓம் மஹாக் ஞானினே ................நம
ஓம் மஹா ஸ்திராய ................நம
ஓம் தேவ சாஸ்த்ரே ................நம
ஓம் பூத சாஸ்த்ரே ................நம
ஓம் பீமஹாஸ பராக்ரமாய ................நம
ஓம் நாத ஹாராய ................நம
ஓம் நாக ஹேசாய ................நம
ஓம் வ்யோம கேசாய ................நம
ஓம் ஸநாதநாய ................நம
ஓம் நித்யாய ................நம
ஓம் நிர்க்குணாய ................நம
ஓம் நித்ய த்ருப்தாய ................நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நிராச் ரயாய ................நம
ஓம் லோகாச் ரயாய ................நம
ஓம் கணாதீசாய ................நம
ஓம் சது: ஷஷ்டி கலாமயாய ................நம
ஓம் ரிக்யஜுஸ்ஸாமாதர்வண ரூபிணே ................நம
ஓம் மல்லகா ஸுரபஞ்ஜனாய ................நம
ஓம் த்ரிமூர்த்தயே ................நம
ஓம் தைத்ய மதனாய ................நம
ஓம் ப்ரக்ருதயே ................நம
ஓம் புருஷோத்தமாயா ................நம
ஓம் கால ஞானினே ................நம
ஓம் மஹா ஞானியே ................நம
ஓம் காமதாய ................நம
ஓம் கமலேக்ஷணாய ................நம
ஓம் கல்ப வ்ருக்ஷாய ................நம
ஓம் மஹா வ்ருக்ஷாய ................நம
ஓம் வித்யா வ்ருக்ஷாய ................நம
ஓம் விபூதி தாய ................நம
ஓம் ஸம்ஹார தாபவிச்சேத்ரே ................நம
ஓம் பசுலோக பயங்கராய ................நம
ஓம் ரோக ஹந்த்ரே ................நம
ஓம் ப்ராண தாத்ரே ................நம
ஓம் பரகர்வ விபஞ்ஜனாய ................நம
ஓம் ஸர்வ சாஸ்த்ராத்த தத்வக்ஞாய ................நம
ஓம் நீதி மதே ................நம
ஓம் பாப பஞ்ஜனாய ................நம
ஓம் புஷ்கலா பூர்ணா ஸம்யுக்தாய ................நம
ஓம் மரமாத்மயே ................நம
ஓம் ஸதாங்க தயே ................நம
ஓம் அனந்தாதித்ய ஸம்காசாய ................நம
ஓம் ஸுப்ரஹ்மண்யானு ஜாய ................நம
ஓம் பலினே ................நம
ஓம் பக்தானு கம்பினே ................நம
ஓம் தேவ சாய ................நம
ஓம் பகவதே ................நம
ஓம் பக்த வத்ஸலாய ................நம

**ஓம் ஸமஸ்த நானாவித பரிமள**
**மந்த்ர புஷ்பம் அர்ச்சனம் ஸமர்ப்பயாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாமியே சரணம் ஐயப்பா!

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் நூற்றெட்டு சரணக் கோவை

| | |
|---|---|
| ஓம் கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அன்னதானப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் உண்மைப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊழ்வினையை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏழைப்பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒப்பிலாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிவன் மால் திருமகனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அச்சங்கோயில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப் புழைப்பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பலவாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணிகண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலா வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்ப்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறை தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலை கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடிப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எரிமேலி சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்திய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டைத்துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவவைஷ்ணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தி தரும் பேரழகே சரணம் ஐயப்பா
ஓம் பேரூத்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையே ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளைகட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வெட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதா நதியே சரணம் ஐயப்பா
ஓம் அழுதமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனை பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப்பாரைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந்தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ இராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீபஜோதித் திரு ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பழவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருபம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக் குழியே சரணம் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் சபரிபீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கருப்பண்ண சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் கடுத்த சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கற்பூரப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் நாகராசா பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சற்குரு நாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மகர ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் மங்கள மூர்த்தியே | சரணம் ஐயப்பா |

**ஓம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா**

தினமும் ஐயன் 108 சரணக் கோவையை காலை - மாலை பாராயணம் செய்து இஷ்ட சித்திகளை அடையுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"ஓம் சாமியே சரணம் ஐயப்பா!"

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் அருந்தமிழ் அர்ச்சனை

ஓம் ஹரிஹர சுதனே போற்றி
ஓம் அன்னதானப் பிரபுவே போற்றி
ஓம் அச்சந் தவிர்ப்பவனே போற்றி
ஓம் அச்சங்கோவில் அரசே போற்றி
ஓம் ஆரிபங்காவு ஐயாவே போற்றி
ஓம் ஆறுமுகன் தம்பியே போற்றி
ஓம் ஆபத்தில் அருள்பவனே போற்றி
ஓம் ஆதியின் ஆதியே போற்றி
ஓம் இனிக்கும் தமிழ்த் தேனே போற்றி
ஓம் இன்பமெல்லாம் தருபவனே போற்றி (10)

ஓம் இச்சை தவிர்ப்பவனே போற்றி
ஓம் இணையில்லாத் தெய்வமே போற்றி
ஓம் ஈசனின் திருமகனே போற்றி
ஓம் உலகாளும் நாயகனே போற்றி
ஓம் உண்மைப் பரம்பொருளே போற்றி
ஓம் உள்ளமெல்லாம் உறைபவனே போற்றி
ஓம் உத்தமனே சத்தியனே போற்றி
ஓம் ஊக்கம் தருபவனே போற்றி
ஓம் ஊழ்வினை ஒழிப்பவனே போற்றி
ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே போற்றி (20)

ஓம் எங்கள் குலதெய்வமே போற்றி
ஓம் எளியோர்க்கு எளியவனே போற்றி
ஓம் எரிமேலி சாஸ்தாவே போற்றி
ஓம் என் குருநாதனே போற்றி
ஓம் ஏழைப் பங்காளனே போற்றி
ஓம் ஏகாந்த மூர்த்தியே போற்றி
ஓம் ஐங்கரன் தம்பியே போற்றி
ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே போற்றி
ஓம் ஐயப்பதேவனே போற்றி
ஓம் ஒப்பில்லாத் திருமணியே போற்றி (30)

ஓம் ஒளிரும் திருவிளக்கே போற்றி
ஓம் ஓவியமாய்த் திகழ்பவனே போற்றி
ஓம் ஓங்காரத்துட் பொருளே போற்றி
ஓம் ஓதும் மறைபொருளே போற்றி
ஓம் ஔவைத் தமிழமுதே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஔடதங்கள் அருள்பவனே போற்றி
ஓம் கலியுக சுதனே போற்றி
ஓம் கற்பூரப் பிரியனே போற்றி
ஓம் கண்கண்ட தெய்வமே போற்றி
ஓம் காந்தமலை ஜோதியே போற்றி (40)

ஓம் காக்கும் கடவுளே போற்றி
ஓம் குளத்துப்புழைப் பாலகனே போற்றி
ஓம் குற்றம் குறை பொறுப்பாய் போற்றி
ஓம் சத்தியத்தின் உருவே போற்றி
ஓம் சங்கடங்கள் தீர்ப்பாய் போற்றி
ஓம் சற்குருநாதனே போற்றி
ஓம் சபரிமலை வாசனே போற்றி
ஓம் சகல கலை வல்லோனே போற்றி
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே போற்றி
ஓம் சந்தனப் பிரியனே போற்றி (50)

ஓம் சக்தியின் மகனே போற்றி
ஓம் சாந்த மூர்த்தியே போற்றி
ஓம் சாந்த குணப் பிரியனே போற்றி
ஓம் சாந்த குணம் அளிப்பவனே போற்றி
ஓம் சாஸ்தாவின் பேரருளே போற்றி
ஓம் சிவன்மால் திருமகனே போற்றி
ஓம் சிவ வைணவ ஐக்கியமே போற்றி
ஓம் சிறியோர்க்கருளும் பெரியோய் போற்றி
ஓம் சித்தம் தெளிவிப்பாய் போற்றி
ஓம் சிந்தை குளிர்விப்பாய் போற்றி (60)

ஓம் சீர்பெருக்கும் செம்மலே போற்றி
ஓம் சுந்தரமூர்த்தியே போற்றி
ஓம் சுணங்காமல் காப்பாய் போற்றி
ஓம் சூதில்லா மனமளிப்பாய் போற்றி
ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தாய் போற்றி
ஓம் சோதியே அருட்சுடரே போற்றி
ஓம் சோர்விலா மனந்தருள்வாய் போற்றி
ஓம் சோதிமயமானவனே போற்றி
ஓம் சௌபாக்கியம் அளிப்பவரே போற்றி
ஓம் தர்ம சாஸ்தாவே போற்றி (70)

ஓம் தர்மத்தின் தலைவனே போற்றி
ஓம் தர்மங்கள் நிலைக்கச் செய்வாய் போற்றி
ஓம் தணியாத ஆசைகள் தணிப்பாய் போற்றி
ஓம் தாயாக வந்து காப்பவனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தாழ்வில்லா எண்ணங்கள் தருவாய் போற்றி
ஓம் திருவருளைத் தேடுகின்றோம் அருள்வாய் போற்றி
ஓம் திகட்டாத இன்பங்கள் குவிப்பாய் போற்றி
ஓம் தீபஜோதி திருஒளியே காப்பாய் போற்றி
ஓம் தீய எண்ணங்கள் தீண்டாமல் அழிப்பாய் போற்றி
ஓம் தீதொன்றும் வராமல் காப்பாய் போற்றி (80)

ஓம் துணையாக வாழ்வில் தொடர்வாய் போற்றி
ஓம் துன்பங்கள் போக்கும் தூயவனே போற்றி
ஓம் தூயமனம் தருவாய் போற்றி
ஓம் தெவிட்டாத தெள்ளமுதே தேனே போற்றி
ஓம் தென்னவர் வளர்த்த தீந்தமிழே போற்றி
ஓம் தேவரெல்லாம் போற்றும் தேன்மழையே போற்றி
ஓம் தோன்றாத் தணையாகத் தோன்றுவாய் போற்றி
ஓம் நல்லவைக்கும் அல்லவைக்கும் நாயகனே போற்றி
ஓம் நம்பியுன்றன் அடிபணிந்தோம் நல்லவனே போற்றி
ஓம் நல்லமனம் நல்லகுணம் நலந் தருவாய் போற்றி (90)

ஓம் நாள்தோறும் உன்நாமம் நினைத்திருப்போம் போற்றி
ஓம் நித்திய பிரம்மச்சாரியே நின்னடி போற்றி
ஓம் நீலிமலை வாசனே! நீயே துணை போற்றி
ஓம் நீங்காத இன்பங்கள் நிறைவிப்பாய் போற்றி
ஓம் பண்புநிறை வாழ்வளிப்பாய் நின்பாதமலர் போற்றி
ஓம் பாவங்கள் போக்கிடுவாய் புண்ணியனே போற்றி
ஓம் பிறவித் துயர் களைவாய் பேராளா போற்றி
ஓம் பில்லி சூனியங்கள் தள்ளி ஒதுக்கிடுவாய் போற்றி
ஓம் புண்ணியனே! புதுமலரே! பூமணமே! போற்றி
ஓம் பூதநாதனே! தூயபாலனே போற்றி (100)

ஓம் மணிகண்ட தேவனே! போற்றி
ஓம் மறைபொருள் நாதனே போற்றி போற்றி
ஓம் மாயை அகற்றுவாய் போற்றி போற்றி
ஓம் முத்தமிழ் வித்தகா! போற்றி போற்றி
ஓம் மெய்யப்பா!' ஐயப்பா! போற்றி போற்றி
ஓம் ஓம் வள்ளலே! எங்கள் வாழ்வே! போற்றி போற்றி
ஓம் எங்குமே உன்னருள் போற்றி போற்றி
ஓம் மங்களம் பொங்குக! போற்றி போற்றி (108)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

## காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை, ஆறுமுகன் தம்பியை
சபரி கிரீசனை, சாந்த ஸ்வரூபனை
தினம் தினம் போற்றிப் பணிந்திடுவோம்.
ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே.

## நூல்

மண்ணுல கெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக வருக

புலி வாகனனே வருக வருக
புவியேல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம் பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக

பதினெண் படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப்பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே.

சபரிகிரீசனை நினைத்தே நீறிடத்
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்கள் எல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந் தேத்துவர்

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சற்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

**வேண்டுதல்**

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முகப் பூஜ்யன் நாவினைக் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க

வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப் பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா தொடைதனைக் காக்க

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜயகுமாரன் விழிகளைக் காக்க

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாள ரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜா பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்பபுறம் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கக் காக்கக் கருணையால் காக்க
பார்க்கப் பார்க்க என் பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலைதன்னைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திடக் கருணை புரிவாய்

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய்

வாதம், பித்தம் சிலேட்சுமத் துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா!

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரிகிரீசா

காமம், குரோதம், லோபம், மோஹம்
மதமாச்சர்யமெனும் ஐம்பெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுக விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய்

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோபம், துன்மார்க்கம் கல்லாமல்
வேதநெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூப்பும், பிணியும், வறுமையும், பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய் யாமல்
உள்ளன்புடனே உன்திரு நாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ

பொன்னம்பலத்துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியா நமோ நமோ
சுரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ

சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

**பிரமாண்ட புராணத்தில் கேரளீய மகாத்மியத்தில் பரசுராமரால் ஐயப்பனைத் துதித்துப் பாடப்பட்ட கவசம்**



*"சாமியே சரணம் ஐயப்பா!"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிமூல கணபதியை

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு நாங்க
கார்த்திகை மொதற்தேதி மாலையிட்டோம் நாங்க
அய்யப்பா அய்யப்பா என்றே சொல்லி நாங்க
ஆறுவாரம் தானே நோன்பிருந்தோம் நாங்க

(கன்னி)

குருசாமி துணை கொண்டு அவர்பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியைச் சுமந்துகிட்டு வந்தோமையா
எருமேலி பேட்டைதுள்ளி வாபரையே வேண்டிக்கிட்டு
பேரூர்தோட்டில் பொரிபோட்டு வந்தோமையா

(கன்னி)

காளை கட்டி அஞ்சல் வந்து அமுதமலை ஏறிகிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமையா
பம்பையிலே குளிச்சுப்புட்டு பாவங்களை - தொலைச்சுப்புட்டு
நீலிமலை ஏறிக்கிட்டு வந்தோமையா

(கன்னி)

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூர ஜோதிதனை கண்டோமையா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உன்மகிமை அறிந்தோமையா

(கன்னி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரதம் இருக்கும் சுவாமிகளே

விரதம் இருக்கும் சுவாமிகளே - உங்கள்
வீடுகள் ஐயப்பன் கோயில்களே
உருகி வணங்கும் சுவாமிகளே - உங்கள்
உள்ளங்கள் தெய்வ இல்லங்களே

சாமி சரணம் ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
ஐயப்ப சரணம் சாமி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா

இருமுடி சுமக்கும் சுவாமிகளே - உங்கள்
திருவடி பணிந்தேன் வாழ்த்துங்களே
காவி உடுத்திய சுவாமிகளே - உங்கள்
கண்கள் மகர ஜோதிகளே

சரணம் ஒலிக்கும் சுவாமிகளே - உங்கள்
சரணம் அன்பின் பாடல்களே
சபரிக்குப் போகும் சுவாமிகளே - இனி
கடவுளின் சொந்தம் நீங்களே
(சாமி சரணம்)

மாலை கொடுத்தவர் குருசுவாமி - அதை
மகிழ்வுடன் அணிபவர் கன்னிசாமி
அணிபவர் வாழ்வில் துணையாகும்
ஸ்ரீ ஐயப்பன் தானே நம் தெய்வம்
(சாமி சரணம்)

வானத்து ஜோதி எங்கள் ஐயப்பா
வந்தோம் ஐயா பேட்டை துள்ளி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவான் சரணம்

பகவான் சரணம், பகவதி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம், பகவான் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா

அகமும் குளிரவே அழைக்கின்றோம்
சரணம் சரணம், ஐயப்பா
பகலும் இரவும் உன் நாமமே
கரிமலை வாசா, பாவ விநாசா
சரணம் சரணம் ஐயப்பா
கருத்தினில் வருவாய், கருணையைப் பொழிவாய்
சரணம் சரணம் ஐயப்பா
மஹிஷி சங்காரா மதகஜவாகனா
சரணம் சரணம் ஐயப்பா
சுகுண விலாசா சுந்தர ரூபா
சரணம் சரணம் ஐயப்பா

ஆறுவரமே நோன்பிருந்தோம்
பேரழகா உனைக் காண வந்தோம்
பாலபிஷேகம் உனக்கப்பா - இந்த
பாலனைக் கடைக்கண் பாரப்பா
முத்திரைத் தேங்காய் உனக்கப்பா
தித்திக்கும் நாமம் எனக்கப்பபா
கற்பூர தீபம் உனக்கப்பா உன்
பொற்பத மலர்கள் எனக்கப்பா
தேவன் பாதம் தேவி பாதம்
திருவடி சரணம் ஐயப்பா
நாவினில் தருவாய் கீதமப்பா
தேவை உன் திருப் பாதமப்பா
நெய்யபிஷேகம் உனக்கப்பா
உன் திவ்ய தரிசனம் எனக்கப்பா
தையினில் வருவோம் ஐயப்பா
அருள் செய்யப்பா மனம் வையப்பா

*(பகவான் சரணம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சொல்லிக் கூப்பிடுவோம் சபரிமலை வாசனை
வரணும் என்ற அழைத்திடுவோம் வரம் கொடுக்கும் ஈசனை
அருள் தரும் ஆண்டவனை அன்பருக்கு மித்திரனை
சிரம் தாழ்த்தி வணங்குவோம் ஹரிஹரசுதன் ஐயப்பனை
வில்லாளி வீரனே வீரமணி கண்டனே தமிழ்
சொல்லெடுத்துப் பாடுவோம் சுந்தரேசர் மைந்தனை
ஸ்வாமி சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா
சபரிமலை செல்பவர்க்கு சஞ்சலங்கள் இல்லை
பயம் தனையே போக்கிடுவான் பந்தளனின் பிள்ளை
அபயம் என்று சரணடைந்தால் அகன்றிடும் தொல்லை
அவனின்றி அவனியிலே அணுவும் அசைவதில்லை
வீட்டை விட்டு கட்டும் கட்டி அருள்மலை புறப்படுவோம்
கூட்டுச் சரணம் போட்டு எரிமேலி பேட்டை செல்லுவோம்
பேட்டைத் துள்ளி ஆடும்போது பேரின்பம் கொள்வோம்
கோட்டைக் காவலன் வாவரு சாமியை
கொண்டாடி மகிழ்வோம்
ஸ்வாமி சரணம் ஐயப்பா, சரணம் சரணம் ஐயப்பா
ஸ்வாமி சரணம் ஐயப்பா
சீர்மேவும் சபரிமலை நாதனருள் தேடு
ஈரொன்பது படியேறி ஈசன் பதம் நாடு
பாரெல்லாம் காத்து நிற்கும் பரமனின் திருவீடு
நாராயணன் செல்வனையே நாவினிக்க பாடு (ஸ்வாமி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சன்னதியில் கட்டும் கட்டி

சன்னதியில் கட்டும்கட்டி தன்னானேனானே நாங்க
சபரிமலை பயணமுங்கோ தில்லாலே லேலோ

கார்த்திகையில் மாலை போட்டு தன்னானேனானே நாங்க
கடும் பயணம் போறோமுங்கோ தில்லாலே லேலோ

மார்கழியில் கட்டும் கட்டி தன்னானேனானே நாங்க
மணிகண்டனைப் பார்க்கப்போறோம் தில்லாலே லேலோ

எருமேலி பேட்டை துள்ளி தன்னானேனானே நாங்க
ஏறிடுவோம் சபரிமலை தில்லாலே லேலோ

அழுதையில் ஸ்நானம் செய்து தன்னானேனானே நாங்க
அன்னதானம் பண்ணிடுவோம் தில்லாலே லேலோ

கரிமலையைக் கடந்து நாமும் தன்னானேனானே நாங்க
ஹரிஹரனைக் காணப் போவோம் தில்லாலே லேலோ

பம்பையிலே குளிச்சுப்புட்டு தன்னானேனானே நாங்க
பாவங்களைத் தீர்க்கப் போறோம் தில்லாலே லேலோ

பதினெட்டாம் படியேறி தன்னானேனானே நாங்க
பகவானைக் கண்டிடுவோம் தில்லாலே லேலோ

மலையாம் மலை கடந்து தன்னானேனானே நாங்க
மகர ஜோதி காணப்போறோம் தில்லாலே லேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிக் கட்டு சபரிமலைக்கு

இருமுடி தாங்கி ஒருமனதாகி குருவெனவே வந்தோம்
இருவினை தீர்க்கும் எமனையும் வெல்லும்
திருவடியைக் காணவந்தோம்

### பல்லவி

பள்ளிக் கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சுவாமியே ஐயப்போ, ஐயப்போ சாமியே
நெய்யபிஷேகம் சாமிக்கே, கற்பூர தீபம் சுவாமிக்கே
ஐயப்பன் மார்களும் கூடிக்கொண்டு
ஐயனை நாடிச் சென்றிடுவார்
சபரி மலைக்கே சென்றிடுவார் (ஸ்வாமி)

### அநுபல்லவி

கார்த்திகை மாதம் மாலையணிந்து
நேர்த்தியாகவே விரதமிருந்து
பார்த்தசாரதியின் மைந்தனே உனைப்
பார்க்க வேண்டியே தவமிருந்து (ஸ்வாமி)
இருமுடி எடுத்து எரிமேலி வந்து
ஒருமனதாகிப் பேட்டை துள்ளி
அருமை நண்பராம் வாவரைத் தொழுது
ஐயனின் அருள்மலை ஏறிடுவார்
அழுதை ஏற்றம் ஏறும்போது
அரிஹரன் மகனை துதித்துச் செல்வார்
வழிகாட்டிடவே வந்திடுவார் ஐயன்
வன்புலி ஏறி வந்திடுவார் (ஸ்வாமி)
கரிமலை ஏற்றம் கடினம் கடினம்
கருணைக் கடலும் துணை வருவார்
கரிமலை இறக்கம் வந்த உடனே
பெருந்தி பம்பை கண்டிடுவார் (ஸ்வாமி)
கங்கை நதிபோல் புண்ணிய நதியாம்
பம்பையில் நீராடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலிமலை ஏற்றம் சிவபாலனும் ஏற்றிடுவார்
காலமெல்லாம் நமக்கே அருட் காவலனாயிருப்பார்
தேக பலம் தா என்றால்
அவர் தன் தேகத்தைத் தந்திடுவார்
பாதபலம் தா என்றால் அவர்
தன் பாதத்தை தந்திடுவார் - நல்ல
பாதையைக் காட்டிடுவார் (ஸ்வாமி)
சபரி பீடமே வந்திடுவார்
சபரி அன்னையைப் பணிந்திடுவார்
சரங்குத்தி ஆலில் கன்னிமார்களும்
சரத்தினைப் போட்டு வணங்கிடுவார்
சபரிமலை தனை நெருங்கிடுவார்
பதினெட்டு படிமீதும் ஏறிடுவார்
கதி யென்றவனைச் சரணடைவார்
மதிமுகம் கண்டே மயங்கிடுவார்
துதிக்கையிலே தன்னையே மறந்திடுவார்
பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளம் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்பா சாமியே ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்போ சாமி சரணம் ஐயப்போ
(ஸ்வாமி)

## சந்தனமுனா சந்தனம்

சந்தனமுனா சந்தனம் சபரிமலை சந்தனம்
அந்த சந்தனத்த பூசிகிட்டு சரண கோஸம் போட்டு
அத்தருனா அத்தரு அமுதமலை அத்தரு
அந்த அத்தரத்தான் பூசிகிட்டு ஆனந்தமா ஆடுங்க.

பன்னீருனா பன்னீரு பம்பா நதி பன்னீரு
அந்த பன்னீரதான் தெளிச்சுக்கிட்டு பாவங்களை போக்குங்க
குங்குமம்முனா குங்குமம் குழத்துப்புல குங்குமம்
அந்த குங்குமத்தை வைச்சுக்கிட்டு கூட்டமாக ஆடுங்க.

சத்துயமான படியுங்க ஐயன பதினெட்டாம் படியுங்க
படியில் தேங்கா உடையுங்க பகவானை வேண்டுங்க
நெய்யபிஷேகம் செய்திடுங்க நெஞ்சுருக வேண்டுங்க
நெனச்சதெல்லாம் தருவார் நம்ம நீலிமலை வாசனுங்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பன் பவனி

பவனி வருகிறார் ஐயன் பவனி வருகிறார்
பக்தர் குறைத் தீர்த்திடவே பவனி வருகிறார்
அவனியெல்லாம் ஆளவந்த ஐயன் வருகிறார்
அண்டினோரை ஆதரிக்க பவனி வருகிறார் (பவனி)

பம்பை நதிக் கரையோரம் பவனி வருகிறார்
பந்தளத்து ராஜன் மகன் பவனி வருகிறார்
கன்னிமூல கணபதியுடன் பவனி வருகிறார்
கண்கண்ட தெய்வமாக பவனி வருகிறார் (பவனி)

பாம்பணிந்த ஈசனோடு பவனி வருகிறார்
பாரளந்த மாயன் மகன் பவனி வருகிறார்
கானகத்தின் அரசனாக பவனி வருகிறார்
வானளாவும் சரணம் கேட்டு பவனி வருகிறார் (பவனி)

கண் கொடுத்த கண்மணியாக பவனி வருகிறார்
விண்ணவர்கள் போற்றிடவே பவனி வருகிறார்
வில்லும் அம்பும் கையில் ஏந்தி பவனி வருகிறார்
வீரமணிகண்டாக பவனி வருகிறார் (பவனி)

அச்சன் கோவில் அரசனாக பவனி வருகிறார்
பச்சைமலைப் பாதையிலே பவனி வருகிறார்
பாபவினை தீர்த்திடவே பவனி வருகிறார்
வாபரனின் தோழனாக பவனி வருகிறார் (பவனி)

பதினெட்டாம் படியோரம் பவனி வருகிறார்
நீதியாவும் தந்திடவே பவனி வருகிறார்
காந்தமலை ஜோதியாக பவனி வருகிறார்
சாந்த சொரூபனாக பவனி வருகிறார் (பவனி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் குருநாத ஐயப்பா

ஓம் ஓம் ஐயப்பா
ஓம் குருநாதா ஐயப்பா
அரனார் பாலா ஐயப்பா
அம்பிகை பாலா ஐயப்பா
ஆபத்பாந்தவா ஐயப்பா
ஆதிபராபரா ஐயப்பா
இருமுடிப்பிரியா ஐயப்பா
இரக்கம் மிகுந்தவா ஐயப்பா
ஈசன் மகனே ஐயப்பா
ஈஸ்வரி மைந்தா ஐயப்பா
உமையாள் பாலா ஐயப்பா
உறுதுணை நீயே ஐயப்பா
ஊக்கம் தருவாய் ஐயப்பா
ஊழ்வினை அறுப்பாய் ஐயப்பா
எங்கும் நிறைந்தவர் ஐயப்பா
எங்கள் நாயகா ஐயப்பா
பம்பையின் பாலா ஐயப்பா
பந்தள வேந்தே ஐயப்பா
வன்புலி வாகனரே ஐயப்பா
வனத்தில் இருப்பவா ஐயப்பா
சபரிகிரீசா ஐயப்பா
சாந்தஸ்வரூபா ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலாவின் ஒளி வீசும்

நிலாவின் ஒளி வீசும் நின்னுடைய
நீலவானம் ஐயா - இந்த
உலகின் அனைவரையும் ஒன்றாக்கும்
உந்தன் நாமம் ஐயா (நிலா)

மலைகள் கடந்து வந்தோம் - ஐயப்பா
மனமிரங்கி வருவாய்
அலையும் மனதினிலே ஐயப்பா
அமைதி தாராயோ (நிலா)

வனங்கள் கடந்து வந்தோம்
எமக்கொரு மார்க்கம் அருளாயோ
இருளை அகற்றிடவே என் வாழ்வில்
இன்பம் தாராயோ நிலா)

நியமம் ஒன்றறியேன் நின்னடியார்
நிழலில் நின்றறியேன்
கயமை நானறியேன் ஐயப்பா
கருணை புரியாயோ (நிலா)

மீண்டும் இந்திரனை விண்ணவரின்
வேந்தன் ஆக்கி வைத்தாய்
வேண்டும் பொழுதெல்லாம் - ஐயப்பா
வில்லுடன் வாராயோ (நிலா)

மதுராபுரி வதனா ஐயப்பா
மனத மோகனனே - வணங்கும்
குருமுனிவன் நன்மொழியால்
மகிழும் சிவமணியே (நிலா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் சாமியே சரணம் ஐயப்பா!"

## தேடிவரும் கண்களுக்கு ஓடிவரும் சுவாமி

தேடுகின்ற கண்களுக்கு ஓடிவரும் சுவாமி
திருவிளக்கின் ஒளியினிலே குடியிருக்கும் சுவாமி
வாடுகின்ற ஏழைகளின் வறுமை தீர்க்கும் சுவாமி
வஞ்சமில்லா நல்லவர்க்கு அருள்புரியும் சுவாமி
ஐயப்ப சுவாமி அருள்புரி சுவாமி (தேடுகின்ற)

கண்ணனும் நீ கணபதி நீ கந்தனும் நீயே - எங்கள்
காவல் தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே
அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியும் நீயே - என்மேல்
அன்பு வைத்து நதிவரைக்கும் ஓடிவந்தாயே
ஐயப்ப சுவாமி இன்னும் அருள்புரி சுவாமி (தேடுகின்ற)

தந்தையுண்டு அன்னையுண்டு எந்தன் மனையிலே ஒரு
தம்பி மட்டும் பிறக்க வேண்டும் உந்தன் வடிவிலே
அன்புகொண்டு தந்தைக்கவன் செய்யும் பணியிலே - நாங்கள்
ஆண்டுதோறும் வந்து நிற்போம் உந்தன் நிழலிலே
ஐயப்பசுவாமி இன்னும் அருள்புரி சுவாமி (தேடுகின்ற)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே மணக்குது

அல்லிமலர் வாசமது எங்கே மணக்குது
அரிஹர புத்திரனின் மேலே மணக்குது
மல்லிகைப் பூ வாசமது எங்கே மணக்குது
மஹிஷி மாத்தனனின் மேலே மணக்குது
முல்லைமலர் வாசமது எங்கே மணக்குது
முகுந்தனின் மைந்தனின் மேலே மணக்குது
சம்பங்கி வாசமது எங்கே மணக்குது
சபரிமலை வாசனின் மேலே மணக்குது
அத்தரும் பன்னீரும் எங்கே மணக்குது
அச்சுதன் மகனின் மேலே மணக்குது
குங்குமம் கஸ்தூரி எங்கே மணக்குது
குளத்துப்புழை வாலகனின் மேலே மணக்குது
சந்தணத்து வாசமது எங்கே மணக்குது
சண்முகன் தம்பியின் மேலே மணக்குது
சாம்பிராணி வாசமது எங்கே மணக்குது
சாஸ்தாவின் சன்னிதியில் தானே மணக்குது
கற்பூர ஜோதியது எங்கே மணக்குது
காந்தமலை வாசனின் முன்னே மணக்குது
விபூதி வாசமது எங்கே மணக்குது
வினாயகன் தம்பியின் மேலே தெரியுது
பக்தியின் வாசமது எங்கே தெரியுது
பந்தள பாலனின் மேலே தெரியுது
நெய்யபிஷேகம் எங்கே மணக்குது
நித்ய பிரம்மச் சாரியின் மேலே மணக்குது
சரணகோஷமது எங்கே ஒலிக்குது
சாஸ்தாவின் சன்னிதியில் தானே ஒலிக்குது
பதினெட்டுப் படிகளது எங்கே இருக்குது
சபரிமலை வாசனின் முன்னே இருக்குது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பன் வாரான்

கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கருப்புசாமி
அவன் கார்மேகம் போல வாரான் கருப்புசாமி
முக்கொண்டைக்காரன் வாரான் கருப்புசாமி
அவன் முன்கோபக்காரன் வாரான் கருப்புசாமி

பம்பாநதி காவல்காரன் கருப்புசாமி
அந்த பதினெட்டு படிக்காவல் கருப்புசாமி
சந்தனப் பொட்டுக்காரன் கருப்புசாமி
அந்த சபரிமலை காவல்காரன் கருப்புசாமி

கச்சையை கட்டிவாரான் கருப்புசாமி
அவன் கை அருவாள் கொண்டு வாரான் கருப்புசாமி
வில்லுப்பாட்டு பாடி வாரான் கருப்புசாமி
அவன் விதவிதமாய் ஆடிவாரான் கருப்புசாமி

மீசையை முறுக்கி வாரான் கருப்புசாமி
அவன் முச்சந்தியில் ஆடிவாரான் கருப்புசாமி
பந்தம் கையில் பிடித்துவாரான் கருப்புசாமி
அவன் பரிவேட்டையாடி வாரான் கருப்புசாமி

முந்தியில் உருமாறும் கருப்புசாமி
அவன் முகத்தழகைக் காட்டிவாரான் கருப்புசாமி
சந்தனத்தை பூசிவாரான் கருப்புசாமி
அவன் சரண கோஷம் போட்டுவாரான் கருப்புசாமி

வாராரய்யா வாராரய்யா கருப்புசாமி வாராரய்யா!
வாராரய்யா வாராரய்யா கருப்புசாமி வாராரய்யா!!

அங்கே இடிமுழங்குது கருப்புசாமி தங்க கவசம் மின்னுது!
அங்கே இடிமுழங்குது கருப்புசாமி தங்க கவசம் மின்னுது!!

வாராரய்யா வாராரய்யா கருப்புசாமி வாராரய்யா!
வாராரய்யா வாராரய்யா கருப்புசாமி வாராரய்யா!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"ஓம் சாமியே சரணம் ஐயப்பா!"

## ஆடுராஜா பிரபு நாகராஜா

ஆடுராஜா பிரவு ஆடுராஜா - எங்கள்
ஐயப்பன் பேரைச் சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரபு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பேரைச் சொல்லி ஆடுராஜா

குழு (ஆடுராஜா)

சரண கோஷம் போட்டுவரும் பக்தர பாரு
சன்னிதியை நாடிவரும் கூட்டத்தப் பாரு - எங்கள்
ஐயப்பனை பாடும் கன்னி சாமியப் பாரு
காட்டில் கருணையுடன் வழி நமக்கு கொடுத்திடுவாரு

ஓடிவா ஐயப்பா
ஓடிவா ஐயப்பா ஓடிவா சுவாமி
நீ ஓடிவா ராஜா நீ ஓடிவா தேவா
நீ ஓடிவா கண்ணா - இந்த
பக்தர்கள் பஜனைக்கு ஓடிவா சுவாமி - அந்த
பம்பா நதி கடந்து ஓடிவா சுவாமி

## அழைக்கட்டுமா

அழைக்கட்டுமா சுவாமியை அழைக்கட்டுமா
அழைக்கட்டுமா சுவாமியை அழைக்கட்டுமா
அந்த ஹரிஹரசுதனை தான் அழைக்கட்டுமா
அந்த அச்சங்கோயில் அரசனைத்தான் அழைக்கட்டுமா
அந்த ஆரியங்காவு ஐயாவைத்தான் அழைக்கட்டுமா
அந்தக் குளத்துப்புழைப் பாலனைத்தான் அழைக்கட்டுமா
அந்த பொன்னம்பல வாசனைத்தான் அழைக்கட்டுமா
எங்கள் வில்லாளி வீரனைத்தான் அழைக்கட்டுமா
எங்கள் வீரமணி கண்டனைத்தான் அழைக்கட்டுமா
அந்த பதினெட்டாம் படி தாண்டி அழைக்கட்டுமா
எங்கள் கன்னி சாமி பஜனைக்கும் அழைக்கட்டுமா
எங்கள் குருசாமி பஜனைக்கு அழைக்கட்டுமா
அழைக்கட்டுமா சுவாமியை அழைக்கட்டுமா
அழைக்கட்டுமா சுவாமியை அழைக்கட்டுமா

(ஓடி வா ஐயப்பா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்திய திருப்படி பூஜைத் துதி

ஓம் சுவாமியின் சத்தியமான பொன்னு பதினெட்டாம் படிகளே சரணம் ஐயப்பா

ஒன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

நாலாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

எட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா
பன்னிரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா
பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா
பதினாலாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா
பதினைந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா
பதினாறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா
பதினேழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா
பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா
சத்திய திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சாஸ்தா அஸ்டகம்

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரக்ஷகரம் விபும்
பார்வதீ ஹ்ருதயானந்தம்
சாஸ்தாரம் பரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம்ஸுதம்
ஷிப்ர ப்ரசாத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

மத்த மாதங்க கமணம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

அஸ்மத் குலேச்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரசா தாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பாண்யேச வம்ச திலகம்
கேரள கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ பூத நாத ꞏதானந்த
ஸர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாகு
சாஸ்த்ரே துப்யம் நமோ நமோ
சுவாமியே சரணம் ஐயப்பா

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும், தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து ரட்ஷிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமான பொன்னு, பதினெட்டாம் படி மேல் வாழும் ஓம் ஸ்ரீ ஹரி ஹரசுதன் ஆனந்த சித்தன், ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா. ஓம் காசி, இராமேஸ்வரம், பாண்டி, மலையாளம் அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ ஹரிஹரசுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"ஓம் சாமியே சரணம் ஐயப்பா!"

## சாமியே சரணம் ஐயப்பா

சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா

ஹரிவ ராஸனம் ஸ்வாமி விஸ்வமோஹனம்
ஹரிததீஸ்வரா ஸ்வாமி ராத்யபாதுகம்
அரிவிமர்தனம் ஸ்வாமி நித்தியநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே (சரண)

சரணகீர்த்தனம் ஸ்வாமி சக்தமானசம்
பரணலோலுயம் ஸ்வாமி நர்த்தனாலயம்
அருணபாஸுரம் ஸ்வாமி பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே (சரண)

ப்ரணயஸத்யகா ஸ்வாமி ப்ராணநாயகா
ப்ரணதகல்பகம் ஸ்வாமி ஸுப்ரபாஞ்சிதம்
ப்ரணவமந்திரம் ஸ்வாமி கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே (சரண)

துரகவாஹனம் ஸ்வாமி ஸுந்தரானனம்
வரகதாயுதம் ஸ்வாமி திவ்யதேசிகம்
குருக்குபாகரம் ஸ்வாமி கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே (சரண)

த்ரிபுவனார்ச்சிதம் ஸ்வாமி தேவநாத்மகம்
த்ரிணயணப்பிரபும் ஸ்வாமி திவ்யதேசிகம்
த்ரிதஸ்பூஜிதம் ஸ்வாமி சிந்திதப்பிரதம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே (சரண)

பவபயாபஹம் ஸ்வாமி பாபுகாவுகம்
புவனமோஹனம் ஸ்வாமி பூதிபூஷணம்
தவள வாரணம் ஸ்வாமி திவ்யவாரணம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே (சரண)

கலமிருதுஸ்மிதம் ஸ்வாமி சுந்தரானனம்
கலப கோமளம் ஸ்வாமி காத்ர மோஹனம்
களப கேசரி ஸ்வாமி வாஜி வாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே (சரண)

ச்ரிதஜனப்பிரியம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
சுருதி விபூஷணம் ஸ்வாமி ஸாது ஜீவனம்
சுருதி மனோகரம் ஸ்வாமி கீதவாசகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே (சரண)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிநடைப் பாடல்

| | |
|---|---|
| சுவாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சுவாமியே |
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| தேவனே | தேவியே |
| தேவியே | தேவனே |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | ஈஸ்வரனே |
| சுவாமி சரணம் | ஐயப்ப சரணம் |
| ஐயப்ப சரணம் | சுவாமி சரணம் |
| பகவான் சரணம் | பகவதி சரணம் |
| தேவன் சரணம் | தேவி சரணம் |
| தேவி சரணம் | தேவன் சரணம் |
| ஈஸ்வரன் சரணம் | ஈஸ்வரி சரணம் |
| ஈஸ்வரி சரணம் | ஈஸ்வரன் சரணம் |
| பள்ளிக் கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| இருமுடி கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | இருமுடி கட்டு |
| நெய்யபிஷேகம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | நெய்யபிஷேகம் |
| கற்பூர தீபம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | கற்பூர தீபம் |
| திருவாபரணம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | திருவாபரணம் |
| காணிப் பொன்னு | சுவாமிக்கு |
| சுவாமிக்கு | காணிப் பொன்னு |
| கல்லும் முள்ளும் | காலுக்கு மெத்தை |
| காலுக்கு மெத்தை | கல்லும் முள்ளும் |
| குன்றும் குழியும் | கண்ணுக்கு வெளிச்சம் |
| கண்ணுக்கு வெளிச்சம் | குன்றும் குழியும் |
| தேகபலம் தா | பாதபலம் தா |
| பாதபலம் தா | தேகபலம் தா |
| தூக்கிவிடப்பா | ஏந்திவிடப்பா |
| ஏந்திவிடப்பா | தூக்கிவிடப்பா |
| வில்லாளி வீரனே | வீரமணிகண்டனே |
| வீரமணி கண்டனே | வில்லாளி வீரனே |
| யாரைக் காண | சுவாமியைக் காண |
| சுவாமியைக் கண்டால் | மோட்சம் கிட்டும் |
| எப்போ கிட்டும் | இப்போ கிட்டும் |
| சுவாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சுவாமியே |

*சாமியப்பா சரணமப்பா பம்பா வாசா சரணமப்பா*
*சாமியப்பா சரணமப்பா பந்தளராசா சரணமப்பா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மங்களம்

ஜெய மங்களம் நித்ய சுபமங்களம்
ஹரிஹர சுதனுக்கு பார்வதிலோலனுக்கு
பம்பையின் பாலனுக்கு பந்தளத்தரசனுக்கு
ஜெய மங்களம் நித்ய சுபமங்களம்

சத்தியத்தை கைகொண்டு நித்யமும் உனை நினைத்து
பக்தியுடன் நின் மாலை தரிப்பவர்க்கு
ஜெய மங்களம் நித்ய சுப மங்களம்

சபரிமலை நாதனுக்கு சுபமங்களம்
சங்கரியாள் பாலனுக்கு ஜெயமங்களம்
சத்தியங்கள் காப்பவர்க்கு சுபமங்களம்
சத்ய தர்ம சாஸ்தாவுக்கு ஜெய மங்களம்
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்
சுவாமியே சரணம் ஐயப்பா!

## தீப மங்களம்

தீப மங்கள ஜோதி நமோ நம
தூஸய சபரிகிரீசா நமோ நம
பூரண புஷ்களை நாதா நமோ நம
அருள் தாராயே.

**- சுபமங்களம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ॐ

"விஷ்ணு வித்யா சாகரம்" பிரம்மஸ்ரீ சத்ய நாராயணன் போற்றி

**ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்தானம், தெஹிவளை.**



வாழ்வில் பல சிக்கல்களில் மாட்டிக் கொண்டு தினமும் அல்லல் பட்டு, உழன்று வரும் நாம் வருடத்துக்கு ஒரு முறையாவது, சில நாட்களாவது, தூய மனத்துடன், மெய்யான பக்தி யுடன் நல்ல சிந்தனையுடன், மனத்தைக் கட்டுப் படுத்தி, விரதங் களிருந்து, பூஜைகள், அன்ன தானங்கள், தான, தருமங்களை இயன்றளவு நம் சக்திக்கேற்றவாறு செய்து தெய்வப் பணி மேற்கொள்ள ஒரு நல்ல வாய்ப்பினை இந்த சபரி கிரி யாத்திரை நமக்குத் தருகிறது.

உலகில் மதிப்பு மிக்கது மனித வாழ்க்கைதான். மனித வாழ்க் கையை ஐந்து பருவங்களாக நமது சாஸ்திரங்கள் பிரித்துச் சொல் கின்றன. அந்த ஐந்து பருவங்களையும் விளக்கும் வகையில் ஐயப்பனின் அவதாரங்கள் அமைந்திருக்கின்றன. ஐயப்ப சுவாமியின் வாழ்க்கையும் ஐந்து பருவங்களைக் கொண்டது.

பிறந்தது முதல் பதினெட்டு வயது வரை "பால்ய பருவம்". இந்தப் பருவத்தை விளக்கும் அவதாரத்தை விளக்கும் திருத்தலம் குளத்துப் புழா. பத்தொன்பது வயது முதல் முப்பத்தைந்து வயது வரை உள்ள பருவம் "யௌவன பருவம்" இந்தப் பருவத்தை விளக்கும் தலம் ஆரியங்காவு. முப்பதாறு வயது முதல் ஐம்பத்தைந்து வயது வரை "கிருஹஸ்த பருவம்" இந்தப் பருவத்தை விளக்கும் தலம் அச்சன்கோவில். ஐம்பத்தாறு வயது முதல் எண்பத்தைந்து வயது வரை உள்ள பருவம் "வானப்பிரஸ்தம்". இப் பருவத்தை விளக்கும் தலம் சபரிமலை. எண்பத்தாறு வயது முதல் ஏகாந்த நிலை. இந்த நிலை விளக்கும் தலம் காந்த மலை. இப்படி மனித வாழ்வோடு தொடர்புடைய நிலைகளை விளக்கும் தனது அவதாரங்களாக, சுவாமி ஐயப்பன் கேரளாவில் கோவில்கள் கொண்டு அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றார்கள். அது போன்று நமது இலங்கைத் திரு நாட்டிலும் பல இடங்களில் கோவில் கொண்டு பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார். அந்த வகையில் தெகிவளை விஷ்ணு கோவிலில் ஐயப்ப பக்தர்களின் பெரு முயற்சியால் சுவாமி ஐயப்பன் எழுந்தருளி பக்தர்களுக்கு மாலை அணிவித்து, தன்பால் யாத்திரைக்கு வர வழைத்து அருள் பாலித்து வருகின்றார். ஐயன் புகழ் பாடும் இம்மலரில் என்னையும் இணைத்துக் கொண்ட ஐயப்ப பக்தர்களுக்கு எனது நன்றியையும், நல்லாசிகளையும் கூறி, "அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனே சரணம் ஐயப்பா" என்று சுவாமி மணிகண்டனை வணங்கி விடை பெறுகின்றேன்.

Anush Printers. Col.-11. Tel: 0777244893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org